16.02.2026

அ.வ.எண்.125/2023

வா.சா.1 – திரு.ஆறுமுகம், த/பெ. வேலப்ப கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.02.2026 is accordance with the provision of Act X of 3331

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். இதற்கு முன்பாக மின்சார வாரியத்தில் பணியாற்றி வந்தேன் என்றால் ஆமாம். பிரச்சனைக்குரிய கிணற்றில் எனக்கு 1/8 பாகம் பங்குள்ளது. அவ்வாறான நிலையில் எனக்கு 8 நாட்களுக்கு 1 நாள் தண்ணீர் பாய்ச்சும் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் ராமசாமி மற்றும் அய்யாச்சாமி ஆகியோர்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி நபர்களை இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்றால் நான் என்னுடைய பாகத்தில் தண்ணீர் ஓட்டும்போது பிரதிவாதிகள் தண்ணீர் மோட்டாரை பலவந்தமாக நிறுத்திவிட்டனர்.

2. மேற்படி கிணற்றில் 8 நபர்களுக்கும் கூட்டா மின் இணைப்பு உள்ளது. நான் தனிப்பட்ட மின் இணைப்பு மூலமாக தண்ணீர் பாய்ச்சி வருகிறேன் என்றால் வீட்டு உபயோகத்திற்காக தண்ணீர் எடுக்கிறேன். வீட்டு பயன்பாட்டிற்கு நான் தண்ணீர் தினமும் எடுத்து வருகிறேன் என்றால் இல்லை, என்னுடைய முறையில் மட்டுமே எடுக்கிறேன். நான் சொல்வது தவறு என்றும், 8 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே நான் தண்ணீர் எடுக்கும் நிலையில் நான் கூட்டு மின் இணைப்பு மூலமாக தண்ணீர் எடுக்கலாம் என்றும், தனிப்பட்ட முறையில் நீர் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் எனக்கும், அய்யாசாமி, ராமசாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட கூட்டாக உள்ள தொட்டியை சேதப்படுத்தியதால் அதனால் வீட்டு உபயோகத்திற்கு, வீட்டு மின்சாரம் மூலம் தண்ணீர் எடுக்கிறேன்.

3. ஏற்கனேவ நான் முறையற்ற முறையில் தண்ணீர் எடுப்பதாக சொல்லி மின்சார வாரியத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டு மேற்படி மின் இணைப்பு ரத்து செய்யப்பட்டதா என்றால் ரத்து செய்யப்படவில்லை, அபராதம் விதிக்கப்பட்டது. நான் சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் எடுத்ததால் எனக்கு அபராதம் விதிக்கப்பட்டது

என்றால் சரியல்ல. சட்டத்திற்கு உட்பட்டு தான் தண்ணீர் எடுத்தேன், அதனால் அபராதம் விதிக்கப்பட்டதை ரத்து செய்ய கோரி நான் மேல்முறையீடு செய்தேன், மேலும் தகவல் அறியும் உரிமை சட்டம், 2005 ன் படி அறிக்கை பெற்று அதை கொண்டு மின்சார வாரியத்திற்கு மேல்முறையீடு செய்துள்ளேன். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட இடத்தில் பிரதிவாதிகளின் ஒப்புதல் பெறாமல் நான் மின்கம்பம் அமைத்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. நான், என்னுடைய தண்ணீர் பாய்ச்சுதல் முறையை மீறி பிரதிவாதிகள் தண்ணீர் பாய்ச்சும் முறையில் நான் தண்ணீர் பாய்ச்சினேன் என்றால் அவ்வாறு இல்லை.

4. என்னுடைய முறை இல்லாதபோது நான் தண்ணீர் பாய்ச்சியதை பிரதிவாதி தட்டிக்கேட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விவசாய மின் மோட்டாரை பலவந்தமாக நிறுத்தியதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur